4th May 1962]

Caterpillar pest

* 25 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have received any representation from the Agriculturists of Pollachi taluk to control the caterpillar pest in their lands; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Government have examined the representation and sanctioned a scheme for aerial spraying of insecticides to control the spread of red hairy caterpillar pests in 15,000 acres of groundnut crop in Pollachi Taluk of Coimbatore District during 1962–63.

SRI V. SANKARAN : கம்பளிப் பூச்சிகளை முழுவதும் எராடிகேட் செய்வதற்கு மருந்து அடித்தாலும் அது முழுவதும் எராடிகேட் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கம்பளிப் பூச்சியின் முட்டைகள் பூமிக்கு அடியில் இருப்பதால் மருந்து அடித்தாலும் அவைகள் சாகாமல் இருப்பதால் கொஞ்சம் நாட்கள் கழிந்து அவைகள் மறுபடியும் பூச்சிகளாக மாறி விடுகின்றன என்று தெரிய வருகிறது. ஆகவே அவற்றை முழுவதும் எராடிகேட் செய்வதற்கு சர்க்கார் யோசித்திருக்கிறார்கள். அப்படியாயின் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது ஏரோபிளேன் மூலமாக மருந்து அடிக்கிறார்கள். பூமிக்கு ஆறு அல்லது எட்டு அடி உயரத்தில் இருந்து கொண்டு மருந்து அடிக்கிறார்கள். முதலில் அடிக்கும்போதே 100-க்கு ஐம்பது முதற்கொண்டு 90 சதவிகிதம் வரையில் பூச்சிகள் இறந்து விடுவதாக தெரிய வருகிறது. மழை காலத்திலும் காற்று காலத்திலும் அந்த மருந்துகளை அடிக்க முடியாது. அப்படி ஏரோப்ளேன் மூலமாக மருந்துகளை தெளிப்பதால் அநேகமாக எல்லா பூச்சிகளும் இறந்து விடுகின்றன. மருந்துகளை திருப்பித் திருப்பி தெளிப்பதால் அநேகமாக எல்லா பூச்சிகளும் இறந்து விடுகின்றன.

SRI K. PONNIAH : இந்த 'ஏரியல் ஸ்ப்ரே' செய்கிற வகையில் விவசாயிகளுக்குச் சர்க்காரால் கொடுக்கப்படக்கூடிய 'ஸப்ஸிடி' தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : சென்ற வருஷம் பரீட்சார்த்தமாகப் பார்த்ததில், ரூ. 44,531 செலவில் 8,133 ஏக்கரில் இந்த விதமாக மருந்து அடிக்கப்பட்டிருக்கிறது. இதிலே 11 ஆயிரத்துச் சொச்சம் ரூபாய் தான் கவர்ன்மென்ட் ஸப்ஸிடியாகக் கொடுக்கப்பட்டது. மீதியெல்லாம் விவசாயிகளே கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

[4th May 1962

SRI K. PONNIAH : பெருந்துறை பிர்க்காவில் இம்மாதிரி கம்பளிப் பூச்சித் தொல்லை இருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்தப் பகுதிக்கு இந்த 'ஏரியல் ஸ்ப்ரே'-யை விஸ்தரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : ஏரியல் ஸ்ப்ரே செய்யவேண்டுமானல், அதற்குப் புஞ்சை நிலங்கள் விஸ்தாரமாக இருக்க வேண்டும். பெரிய நிலப்பரப்பாக இருந்தால் அங்கு இந்த வேலை செய்ய முடியும்.

SRI K. T. KOSALRAM : இம்மாதிரி கம்பளிப் பூச்சிகள் வரும் இடங்களில் ஏராளமான பயிர்கள் சேதம் அடைந்து, அதனல் நாட்டின் விளைச்சலுக்குக் குந்தகம் ஏற்படுகிறது. அமைச்சர் அளித்த பதிலின்படி, 90 சத விகிதம் அளவுக்குத்தான் இந்த பூச்சிகளைச் சாகடிக்க முடிவதாகவும், பாக்கி 10 சத விகிதம் பூச்சிகளைச் சாகடிக்க முடியவில்லை என்றும் தெரிகிறது. இந்த 10 சத விகிதம் பூச்சிகளை எந்த விதமாக அழிக்கப் போகிறோம் என்பதையும் சொல்லவில்லை. ஆகவே, கம்பளிப் பூச்சிகளை 'கம்ப்ளீட்' ஆக, 'எராடிகேட்' செய்வதற்கான வழிவகைகளை 'இன்வெஸ்டிகேட்' செய்திருக்கிருர்களா ? கம்பளிப் பூச்சிகளைச் சாகடித்து, அவை இனி வராமல் தடுக்கப்படுவதற்கு என்ன 'ஸொல்யூஷன்' கண்டுபிடித்திருக்கிருர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மன்றத்திலே நான் முன்பு ஒரு முறை விடை அளித்திருக்கிறேன். ஓரளவு இந்தப் பூச்சிகள் 'அண்டர்க்ரௌண்ட்' போய்விடுகின்றன. ஆகையால்தான், அவற்றை அடியோடு அகற்ற முடியவில்லை என்று நான் முன்பு சொல்லியிருக்கிறேன்.

SRI K. MOOKIAH THEVAR : இந்தப் பூச்சிகள் 'அண்டர்க்ரௌண்ட்' போய்விடுகிற காரணத்தால், இவைகளை ஒன்றும் செய்ய முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்தில் பதில் சொல்லியிருக்கிருர். இருந்தாலும், அந்தப் பூச்சிகள் திரும்பவும் வந்து, பல விதத்திலே பயிர்களைப் பாதிக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக, எங்கள் பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்கு முக்கியமான காரணம், சென்ற ஐந்து வருஷங்களாக இந்தப் பூச்சித் தொந்தரவு இருந்து வருவதுதான். இவை 'அண்டர்க்ரௌண்ட்' போனலுங்கூட, இவற்றைத் தேடிப் பிடித்தாவது ஒழிக்க திட்டம் வகுக்கப்படுமா ? அதோடு, இரண்டு வகைக் கடலைகளில், கம்பெனிக் கடலையைத்தான் இந்தப் பூச்சி அதிக அளவில் பாதிக்கிறது. இதைப்பற்றியும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : பரீட்சார்த்தமாக பொள்ளாச்சி தாலுகாவில் பார்த்ததில், அதில் ஓரளவு வெற்றி ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். நூற்றுக்கு நூறு பங்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று சொல்ல முடியாது என்றாலும், தொடர்ந்து பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. புஞ்சை

4th May 1962]

நிலங்களை நன்றாக ஆழ உழுது, பூமிக்கடியில் இருக்கும் முட்டைகளைக் கொல்வதற்கு விவசாயிகளும் முயற்சி செய்யவேண்டும். பயிர்களுக்கு இந்தப் பூச்சி வரும்போதுதான் மருந்து அடித்துக் கொல்லவேண்டும்.

SRI K. R. SAMBANDAM : பூச்சிகள் மிகவும் அதிகமாகப் பரவி, பயிர்கள் பாதிக்கப்பட்டு, அதனால், விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுவதால், மருந்து அடிப்பதற்கான செலவுத் தொகை பூராவையுமே சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ?

THE HON. SRI P. KAKKAN : பூராச் செலவையும் ஒத்துக் கொள்ள முடியாது. இதற்கான கட்டணம் cheap ஆகத்தான் இருக்கிறது. மணிலாப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு மூன்று ரூபாய்தான் செலவாகிறது. இதர வகைகளுக்கு ஏக்கருக்கு ரூ. 1.50 தான் செலவாகிறது.

SRI R. KRISHNASAMY NAIDU : இந்தப் பூச்சிகள் நிலக் கடலை மகசூலைத்தான் அதிகமாகப் பாதிக்கின்றன. நிலக் கடலை இலை, இந்தப் பூச்சிகள் எளிதாகத் தின்பதற்கு வசதியாக இருக்கிறது. இந்தப் பூச்சிகள் பரவியுள்ள இடங்களை ஒரு சந்தர்ப்பத்தில் நானும் முதல் அமைச்சர் அவர்களும் சென்று பார்த்தோம். முட்டைகளிலிருந்து பூச்சிகள் எப்படி உரு வாகின்றன என்பனவற்றையெல்லாம் ஓரிடத்தில் எங்களுக்குக் காட்டினார்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், ஒரு தடவை நிலக் கடலை மகசூல் செய்த இடத்தில் அடுத்த ஆண்டு அதே மகசூல் செய்யாமல், வேறு இடத்தில் இதை மாற்றினால் இந்தப் பூச்சிகளை ஒழித்துவிடலாம் என்று தோன்றுகிறது. இரண்டு, மூன்று தடவை இம்மாதிரி மாற்றி மாற்றிப் பயிர் செய்தால், இவற்றை அறவே ஒழித்துவிடலாம். ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு வருஷத்தில் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அங்கு கடலை மகசூல் செய்வது நல்லது என்ற அபிப்பிராயத்தை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : விவசாயிகளே அந்த யோசனையை மேற்கொண்டு நல்ல முறையில் பயிர் செய்தால் நல்லதுதான். கடலைப்பயிர் வைப்பதால் அதிக லாபம் வருகிறது என்பதையும், நெற் பயிர்களுக்குப் பிண்ணாக்கு வேண்டும் என்பதையும், கடலைப் பயிரினால் அனேக நன்மை இருப்பதையும் உணர்ந்து விவசாயிகள் அதிக ஆர்வம் கொண்டு கடலைப் பயிர் அதிகமாகச் செய்ய முன்வருகிறார்கள். அவர்களே, ஒரு வருஷம் விட்டு இந்தப் பயிரைச் செய்ய முன்வருவார்களானால் அரசாங்கம் பாராட்டும்.

SRI K. T. KOSALRAM : அமைச்சர் அளித்த பதில்களை மொத்தமாகப் பார்த்தால், கம்பளிப் பூச்சிகளை அறவே ஒழிக்க இதுவரை ஒரு பரிகாரமும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. இதுபற்றி சரியான ஆராய்ச்சி செய்யப்படவில்லை என்பதும் நன்றாகப் புலனாகிறது. ஆகவே,

[4th May 1962

அன்னிய நாட்டிலிருந்து நல்ல ஆராய்ச்சியாளர்களை வரவழைத்து, உடனடியாக இந்தப் பூச்சித் தொல்லையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதுபற்றி ஆராய்ச்சி செய்ததன் விளைவாக ஏற்பட்ட நன்மைகளை ஏற்கனவே நான் சொன்னேன். இப்பொழுதிருக்கும் நிலைமையில் பூச்சித் தொல்லையைக் கட்டுப் படுத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதில் மேற்கொண்டு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

Water-supply (Madras City)

*26 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether any representations have been made to the Government of Andhra Pradesh for approving the schemes for the supply of water to Madras City from Sangam Anicut in Nellore district; and

(*b*) if so, whether any reply has been received?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) Andhra Government have replied, that the construction of Somasila Dam has not been included in the Third Five-Year Plan and as such the question of supplying water from Somasila Dam to Madras does not arise now.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்குக் காலதாமதம் ஆகும் என்றால், சென்னை நகரத்தின் குடிதண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காக இடைக்காலத் திட்டங்கள் இருந்தனவே, அவற்றை எடுத்துக் கொண்டு நிறை வேற்ற உத்தேசம் உண்டா? பூண்டியிலிருந்து தண்ணீர் பாயக் கூடிய ஆயக்கட்டுகளை விவசாயிகளிடமிருந்து சர்க்காரே வாங்கி, தண்ணீர்ச் சேதத்தைத் தடுப்பது என்ற திட்டம் இருந்ததே, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : நட வடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. பார்ட்-2 ஸ்கீமில் நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is not " water-supply to the City " one of the terms of reference to he Gulhati Commission?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, Sir.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுவதாக செய்தித் தாளில் பார்த்தோமே, அந்தத் துறையிலே அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா ?